No. of Printed Pages : **24**

+1

6285919

**6057**

**A**

பதிவு எண் / Register Number: M A Y - - 2 2

# PART - III

# கணக்குப்பதிவியல் / ACCOUNTANCY

( தமிழ் மற்றும் ஆங்கில வழி / Tamil & English Version)

கால அளவு : 3.00 மணி நேரம் ] [ மொத்த மதிப்பெண்கள் : 90

Time Allowed : 3.00 Hours ] [Maximum Marks : 90

அறிவுரைகள் : (1) அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

**Instructions :** (1) Check the question paper for fairness of printing. If there is any lack of fairness, inform the Hall Supervisor immediately.

(2) Use **Blue** or **Black** ink to write and underline and pencil to draw diagrams.

## பகுதி - I/PART - I

குறிப்பு : (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **20x1=20**

(ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**Note :** (i) Answer **all** the questions.

(ii) Choose the most appropriate answer from the given **four** alternatives and write the option code and the corresponding answer.

[ திருப்புக / Turn over

1. திருத்தியமைக்கப்பட்ட மென்பொருள் ________ க்கு ஏற்றவை.
   (அ) பெரிய, நடுத்தர வணிகம்
   (ஆ) பெரிய, தனித்தன்மையான வணிகம்
   (இ) சிறிய, பாரம்பரிய வணிகம்
   (ஈ) மேலே கூறிய எதுவும் இல்லை

   Customised accounting software is suitable for :
   (a) Large, medium business
   (b) Large, typical business
   (c) Small, conventional business
   (d) None of the above

2. ஒரு இருப்பாய்வு தயாரிக்கப்படுவது :
   (அ) ஒரு குறிப்பிட்ட நாளில்   (ஆ) ஒரு ஆண்டிற்கு
   (இ) ஆண்டு இறுதியில்   (ஈ) இவை ஏதும் இல்லை

   Trial balance is prepared :
   (a) on a particular date   (b) for a year
   (c) at the end of the year   (d) none of the above

3. இருப்பாய்வில் தோன்றும் சம்பளம் எங்கு காண்பிக்கப்படும் ?
   (அ) இருப்பு நிலைக் குறிப்பின் பொறுப்புகள் பக்கம்
   (ஆ) வியாபாரக் கணக்கின் பற்று பக்கம்
   (இ) இருப்பு நிலைக் குறிப்பின் சொத்துகள் பக்கம்
   (ஈ) இலாப நட்டக் கணக்கின் பற்று பக்கம்

   Salaries appearing in the trial balance is shown on the :
   (a) Liabilities side of the balance sheet
   (b) Debit side of Trading account
   (c) Assets side of the balance sheet
   (d) Debit side of Profit and Loss account

4. சாதாரண ரொக்க ஏட்டை வைத்திருக்கும் ஒரு நிறுவனம் பேரேட்டில் ________ தயாரிக்க தேவை இல்லை.
   (அ) முதல் கணக்கு   (ஆ) விற்பனைக் கணக்கு
   (இ) ரொக்கக் கணக்கு   (ஈ) கொள்முதல் கணக்கு

   When a firm maintains a simple cash book, it need not maintain ________ in the Ledger.
   (a) Capital account   (b) Sales account
   (c) Cash account   (d) Purchases account

5. காசோலை மூலம் சம்பளம் வழங்கியது ₹ 3,000 என்பதை குறிப்பேட்டுப் பதிவில் வரவு வைக்கப்பட வேண்டிய கணக்கின் பெயர் :

(அ) வங்கி க/கு (ஆ) சம்பளக் க/கு (இ) எடுப்பு க/கு (ஈ) ரொக்கக் க/கு

In a Journal Entry, Paid salary by cheque of ₹ 3,000 is credited to :

(a) bank A/c (b) salary A/c (c) drawing A/c (d) cash A/c

6. இறுதிச் சரக்கிருப்பு என்பது ஓர் ________.

(அ) கற்பனைச் சொத்து (ஆ) நிலையான சொத்து

(இ) புலனாகாச் சொத்து (ஈ) நடப்புச் சொத்து

Closing stock is an item of ________.

(a) Fictitious asset (b) Fixed asset

(c) Intangible asset (d) Current asset

7. நடப்பு ஆண்டின் ஒரு பேரேட்டுக் கணக்கின் இறுதி இருப்பு ________ தொடக்க இருப்பாகும்.

(அ) கடந்த ஆண்டு (ஆ) அடுத்த ஆண்டு

(இ) நடப்பு ஆண்டு (ஈ) இவற்றில் எதுவும் இல்லை

Closing balance of the current year in the ledger account is the opening balance of the ________.

(a) previous year (b) next year

(c) current year (d) none of these

8. சொத்தின் இறுதி மதிப்பு என்பது, பயனளிப்புக் காலத்தின் ________ அச்சொத்திலிருந்து கிடைக்கும் தொகையாகும்.

(அ) இறுதியில் (ஆ) மத்தியில்

(இ) ஆரம்பத்தில் (ஈ) இவைகளில் ஏதுமில்லை

Residual value of an asset means the amount that it can fetch on sale at the ________ of its useful life.

(a) end (b) middle

(c) beginning (d) none of the above

9. சொத்து கணக்கு கையாள்வது :

(அ) சொத்துகள்
(ஆ) தனிப்பட்ட நபர்கள்
(இ) வருமானம் மற்றும் இலாபங்கள்
(ஈ) செலவுகள் மற்றும் இழப்புகள்

Real account deals with :

(a) Assets
(b) Individual persons
(c) Incomes and gains
(d) Expenses and losses

10. இயந்திரம் நிறுவுவதற்கு செலுத்தப்பட்ட கூலியை கூலிக் கணக்கில் பற்று வைப்பது :

(அ) முழு விடு பிழை
(ஆ) பகுதி விடு பிழை
(இ) இருமுறை பதிந்த பிழை
(ஈ) விதிப் பிழை

Wages paid for installation of machinery wrongly debited to wages account is an error of _________.

(a) Complete Omission
(b) Partial Omission
(c) Duplication
(d) Principle

11. பின்வருவனவற்றுள் எது கணக்கியலின் முதன்மை நோக்கம் ஆகாது ?

(அ) நிறுவனத்தின் நிதி நிலையை அறிந்து கொள்ளுதல்
(ஆ) நடவடிக்கைகளை முறையாகப் பதிவு செய்தல்
(இ) வரிவிதிக்கும் அதிகாரிகளிடம் வரித்தொடர்பான பிரச்சினைகளைத் தீர்த்தல்
(ஈ) வணிகத்தின் இலாபம் ஈட்டும் திறனை அறிந்து கொள்ளுதல்

Which one of the following is not the main objective of accounting ?

(a) Ascertainment of the financial position of the business.
(b) Systematic recording of transaction.
(c) Solving tax disputes with tax authorities.
(d) Ascertainment of the profitability of the business.

12. நேர்க் கோட்டு முறையில் தேய்மானத் தொகையானது :

(அ) அனைத்து ஆண்டுகளுக்கும் நிலையாக இருக்கும்
(ஆ) ஆண்டுதோறும் அதிகரிக்கும்
(இ) ஆண்டுதோறும் மாறக்கூடியது
(ஈ) ஆண்டுதோறும் குறையும்

Under Straight Line Method, the amount of depreciation is :

(a) Constant for all years
(b) Increasing every year
(c) Fluctuating every year
(d) Decreasing every year

**13.** GAAP என்பது :

(அ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கோட்பாடுகள்

(ஆ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் வழிமுறைகள்

(இ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கொள்கைகள்

(ஈ) இவற்றில் ஏதுமில்லை

GAAPs are :

(a) Generally Accepted Accounting Principles

(b) Generally Accepted Accounting Provisions

(c) Generally Accepted Accounting Policies

(d) None of these

**14.** பின்வருவனவற்றில் எந்த ஒன்று, கணக்குகளை குறிமுறையாக்கம் செய்யும் முறைகளில் இல்லாதது ?

(அ) தொகுப்புக் குறிமுறை (ஆ) அணுகக் குறிமுறை

(இ) மதியோட்டுக் குறிமுறை (ஈ) தொடர்ச்சியான குறிமுறை

Which one of the following is not a method of codification of accounts ?

(a) Block Codes (b) Access Codes

(c) Mnemonic Codes (d) Sequential Codes

**15.** விற்பனைத் திருப்ப ஏடு பதிவு செய்வது :

(அ) வாடிக்கையாளரால் திருப்பிய சொத்துகளுக்கு உடனடியாக பணம் செலுத்தாதது.

(ஆ) வாடிக்கையாளரால் திருப்பிய சரக்குகளுக்கு உடனடியாக பணம் செலுத்தியது.

(இ) வாடிக்கையாளரால் திருப்பிய சொத்துகளுக்கு உடனடியாக பணம் செலுத்தியது.

(ஈ) வாடிக்கையாளரால் திருப்பிய சரக்குகளுக்கு உடனடியாக பணம் செலுத்தாதது.

Sales return book is used to record :

(a) Returns of assets by the customer for which cash is not paid immediately.

(b) Returns of goods by the customer for which cash is paid immediately.

(c) Returns of assets by the customer for which cash is paid immediately.

(d) Returns of goods by the customer for which cash is not paid immediately.

16. கீழ்க்கண்ட கணக்குகளில் எந்தக் கணக்கின் இருப்பு இருப்பாய்வில் பற்றுப் பத்தியில் தோன்றும் ?

(அ) எடுப்புகள் கணக்கு (ஆ) பற்பல கடனீந்தோர் கணக்கு

(இ) முதல் கணக்கு (ஈ) செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கு

The account which has a debit balance and is shown in the debit column of the trial balance is :

(a) Drawings A/c (b) Sundry creditors A/c

(c) Capital A/c (d) Bills payable account

17. புதிதாக நிறுவப்பட்ட இயந்திரத்தினைச் சோதனை ஓட்டம் மேற்கொள்வதற்குச் செய்த செலவு ₹ 20,000 என்பது :

(அ) முதலினச் செலவு

(ஆ) தொடக்கச் செலவு

(இ) நீள்பயன் வருவாயினச் செலவு

(ஈ) வருவாயினச் செலவு

Expenditure incurred ₹ 20,000 for trial run of a newly installed machinery will be :

(a) Capital expenditure

(b) Preliminary expense

(c) Deferred revenue expenditure

(d) Revenue expenditure

18. ஒரு பேரேட்டுக் கணக்கின் பற்று பத்தியின் மொத்தத்திலிருந்தும் மற்றும் வரவுப் பத்தியின் மொத்தத்திலிருந்தும் நிகர இருப்பினை கண்டறியும் வழிமுறையை ________ என அழைக்கலாம்.

(அ) குறிப்பேட்டில் பதிதல் (ஆ) கூட்டுதல்

(இ) இருப்புக்கட்டுதல் (ஈ) எடுத்தெழுதுதல்

The process of finding the net amount from the totals of debit and credit columns in a ledger is known as :

(a) Journalising (b) Casting

(c) Balancing (d) Posting

19. ஒரு நடவடிக்கையின் பற்று மற்றும் வரவுத் தன்மைகளை ரொக்க ஏட்டில் பதிந்தால், அது :

(அ) கூட்டுப் பதிவு (ஆ) ஒற்றைப் பதிவு

(இ) எதிர்ப் பதிவு (ஈ) சாதாரணப் பதிவு

If the debit and credit aspects of a transaction are recorded in the cash book, it is :

(a) Compound entry (b) Single entry

(c) Contra entry (d) Simple entry

**20.** கொள்முதல் ஏட்டில் பதிவு செய்வது :

(அ) அனைத்து சரக்குகளின் கடன் கொள்முதல்

(ஆ) அனைத்து சரக்குகளின் கொள்முதல்

(இ) அனைத்து சொத்துக்களின் கொள்முதல்

(ஈ) அனைத்து சொத்துக்களின் கடன் கொள்முதல்

Purchases book is used to record :

(a) all credit purchases of goods

(b) all purchases of goods

(c) all purchases of assets

(d) all credit purchases of assets

## பகுதி - II / PART - II

குறிப்பு : **எவையேனும் ஏழு** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **30** -க்கு **கட்டாயமாக** விடையளிக்கவும். **7x2=14**

**Note :** Answer **any seven** questions. Question No. **30** is **compulsory**.

**21.** கணக்கியலை – வரையறுக்கவும்.

Define accounting.

**22.** வரவு இருப்பு என்றால் என்ன ?

What is credit balance ?

**23.** இருப்பாய்வு என்றால் என்ன ?

What is trial balance ?

**24.** ஏதேனும் இரண்டு கணக்கியல் தொகுப்பின் பெயரைக் குறிப்பிடவும்.

Name any two accounting packages.

**25.** கூடியுள்ள வருமானம் என்றால் என்ன ?

What are accrued incomes ?

26. குறிப்பேட்டுப் பதிவுகள் தருக.

(i) வங்கியிலிருந்து கடன் பெற்றது ₹ 10,000

(ii) கழிவு ரொக்கமாகப் பெற்றது ₹ 5,000

Journalise the following.

(i) Borrowed Loan from Bank ₹ 10,000.

(ii) Received Commission of ₹ 5,000 by cash.

27. ஒரு நிறுவனம் ₹ 50,000 மதிப்புள்ள இயந்திரத்தை வாங்கியது. நிறுவுதல் செலவாக ₹ 5,000 மேற்கொண்டது. இயந்திரத்தின் எதிர்நோக்கும் பயனளிப்பு காலம் 5 ஆண்டுகள். நேர்க்கோட்டு முறையில் ஆண்டுத் தேய்மானத் தொகையை கணக்கிடுக.

A firm purchased a Machine for ₹ 50,000 Erection charges amounted to ₹ 5,000. Effective life of the Machine is 5 years. Calculate the amount of depreciation per year under straight line method.

28. சஞ்சயின் ஏடுகளில் 31, டிசம்பர் 2017 -ஆம் ஆண்டிற்கான வியாபாரக் கணக்கினை தயாரிக்கவும்.

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| தொடக்கச் சரக்கிருப்பு | 570 | கொள்முதல் | 15,800 |
| விற்பனை | 26,200 | கொள்முதல் திருப்பம் | 90 |
| விற்பனைத் திருப்பம் | 60 | இறுதிச் சரக்கிருப்பு | 860 |

Prepare trading account in the books of Mr. Sanjay for the year ended 31st December 2017.

| Particulars | ₹ | Particulars | ₹ |
|---|---|---|---|
| Opening stock | 570 | Purchases | 15,800 |
| Sales | 26,200 | Purchases Returns | 90 |
| Sales Returns | 60 | Closing stock | 860 |

**29.** பின்வரும் குறிப்பேட்டுப் பதிவில் விடுபட்ட தகவல்களை நிரப்புக.

| நாள் | விவரம் | பே.ப.எ | பற்று ₹ | வரவு ₹ |
|---|---|---|---|---|
| | ________ க/கு ப<br>________ க/கு | | ________ | ________ |

(ரொக்கத்திற்கு கொள்முதல் செய்தது ₹ 20,000)

Fill in the missing information in the following journal entry.

| Date | Particulars | L.F | Debit ₹ | Credit ₹ |
|---|---|---|---|---|
| | ________ A/c Dr.<br>To ________ A/c | | ________ | ________ |

(Goods purchased for cash ₹ 20,000)

**30.** கீழ்க்கண்ட விவரங்களிலிருந்து சரக்கு விற்பனைக்கான அடக்கத்தினை கணக்கிடவும்.

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| தொடக்கச் சரக்கிருப்பு | 10,000 | மறைமுகச் செலவுகள் | 5,000 |
| கொள்முதல் | 80,000 | இறுதிச் சரக்கிருப்பு | 15,000 |
| நேரடிச் செலவுகள் | 7,000 | | |

Compute cost of goods sold from the following information.

| Particulars | ₹ | Particulars | ₹ |
|---|---|---|---|
| Opening stock | 10,000 | Indirect expenses | 5,000 |
| Purchases | 80,000 | Closing stock | 15,000 |
| Direct expenses | 7,000 | | |

## பகுதி - III / PART - III

குறிப்பு : எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **40** -க்கு கட்டாயமாக விடையளிக்கவும். **7x3=21**

**Note :** Answer **any seven** questions. Question No. **40** is **compulsory**.

**31.** இரட்டைப் பதிவு கணக்கியல் முறையின் பொன்னான விதிகளைத் தருக.

Give the golden rules of double-entry accounting system.

**32.** 2018, ஜனவரி 1 அன்று வினோத் என்பவரின் ஏடுகளில் கீழ்க்கண்ட இருப்புகள் காணப்பட்டன.

சொத்துகள் : ரொக்கம் ₹ 40,000

சரக்கிருப்பு ₹ 50,000

ராஜியிடமிருந்து பெற வேண்டியது ₹ 50,000

இயந்திரம் ₹ 40,000,

பொறுப்புகள் : ஹரி என்பவருக்கு செலுத்த வேண்டியது ₹ 30,000

தொடக்கப் பதிவினைத் தருக.

The following balances appeared in the books of Vinoth on Jan 1 2018.

Assets : Cash ₹ 40,000; Stock ₹ 50,000 ; Amount due from Raj ₹ 50,000

Machinery ₹ 40,000 ; Liabilities : Amount due to Hari ₹ 30,000.

Pass opening Journal Entry.

**33.** கீழ்க்கண்ட கணக்குகளின் இருப்புகள் இருப்பாய்வில் பற்றுப் பத்தியில் இடம் பெறுமா அல்லது வரவுப் பத்தியில் இடம் பெறுமா எனக் காட்டுக.

(i) வெளித் தூக்குக்கூலி (ii) கூலி (iii) வாடகை பெற்றது

(iv) முதல் (v) விற்பனை (vi) விற்பனைத் திருப்பம்

State whether the balance of the following accounts should be placed in the debit or credit column of the trial balance.

(i) Carriage outwards (ii) Wages (iii) Rent received

(iv) Capital (v) Sales (vi) Sales return

**34.** பின்வரும் நடவடிக்கைகளை மோகன் & கோ நிறுவனத்தின் விற்பனை ஏட்டில் பதிக.

2017

ஆகஸ்டு 1 : இடாப்பு எண் 68 -ன் படி செந்திலுக்கு கடனுக்கு சரக்கு விற்றது ₹ 23,000

ஆகஸ்டு 4 : இடாப்பு எண் 74 -ன் படி மணி என்பவருக்கு கடனுக்கு சரக்கு விற்றது ₹ 10,500

ஆகஸ்டு 8 : சுரேஷ் என்பவருக்கு ரொக்கத்திற்கு சரக்கு விற்றது ₹ 6,500

ஆகஸ்டு 25 : கமலா என்பவருக்கு கடனுக்கு விற்றது.

10 மேசைகள் ஒன்று ₹ 1,500 வீதம்

20 நாற்காலிகள் ஒன்று ₹ 200 வீதம்.

Record the following transactions in the sales book of M/s. Mohan & Co.,

2017

Aug 1 : Sold goods to Senthil as per invoice no. 68 for ₹ 23,000 on credit.

Aug 4 : Sold goods to Mani as per invoice no. 74 for ₹ 10,500 on credit.

Aug 8 : Sold goods to Suresh for cash ₹ 6,500.

Aug 25 : Sold goods to Kamala on credit.

10 tables @ ₹ 1,500 each.

20 chairs @ ₹ 200 each.

**35.** முப்பத்தி ரொக்க ஏட்டின் படிவம் தருக.

Give the format of 'Three column cash book'.

**36.** நிலைச் சொத்து ₹ 50,000 -க்கு வாங்கப்பட்டது. தேய்மான விகிதம் ஆண்டுக்கு 15% குறைந்து செல் இருப்பு முறையில் முதல் இரண்டு ஆண்டுகளுக்கு தேய்மானத் தொகை கணக்கிடவும்.

An asset is purchased for ₹ 50,000. The rate of depreciation is 15% p.a. Calculate the annual depreciation for the first two years under diminishing balance method.

**37.** கணினி அமைப்பின் உள்ளீட்டு மற்றும் வெளியீட்டு சாதனங்களைக் குறிப்பிடுக.

State the input and output devices of a computer system.

**38.** சரிக்கட்டுப் பதிவுகள் என்றால் என்ன ?

What are adjusting entries ?

**39.** முதலின வரவு மற்றும் வருவாயின வரவு – வேறுபடுத்தவும்.

Distinguish between capital receipt and revenue receipt.

**40.** கீழ்க்காணும் விவரங்களிலிருந்து இலாப நட்டக் கணக்கினை தயாரிக்கவும்.

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| மொத்த இலாபம் | 50,000 | வட்டி பெற்றது | 2,000 |
| அலுவலக வாடகை | 10,000 | வெளிதூக்குக் கூலி | 2,500 |
| தள்ளுபடி கொடுத்தது | 12,000 | பொதுச் செலவுகள் | 3,000 |
| விளம்பரம் | 4,000 | | |
| தணிக்கைக் கட்டணம் | 1,000 | | |

From the following details, prepare profit and loss account.

| Particulars | ₹ | Particulars | ₹ |
|---|---|---|---|
| Gross profit | 50,000 | Interest received | 2,000 |
| Office rent | 10,000 | Carriage outwards | 2,500 |
| Discount Allowed | 12,000 | General expenses | 3,000 |
| Advertisement | 4,000 | | |
| Audit fees | 1,000 | | |

## பகுதி - IV / PART - IV

7x5=35

குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

**Note :** Answer **all** the questions.

**41.** (அ) குறிப்பேட்டுப் பதிவினை தருக.

2019

மார்ச்

1 ராம் ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது ₹ 3,00,000

2 வங்கியில் பணம் செலுத்தியது ₹ 2,00,000

3 ஜெயா அறைகலன் விற்பனையகத்திடமிருந்து ₹ 28,000 மதிப்புள்ள அறைகலன்கள் கடனுக்கு வாங்கப்பட்டது.

4 அந்தோணியிடமிருந்து ₹ 5,000 மதிப்புள்ள சரக்குகள் எடுப்பு அட்டை மூலமாக பணம் செலுத்தி வாங்கப்பட்டது.

5 சியாம் என்பவரிடம் இருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது ₹ 50,000.

6 ஜெயா அறைகலன் விற்பனையகத்திற்கு பணம் செலுத்தப்பட்டது.

10 உரிமையாளரின் மின் கட்டணம் செலுத்தியது ₹ 2,000.

11 சொந்த உபயோகத்திற்காக வங்கியிலிருந்து பணம் எடுத்தது ₹ 800.

12 மனோ என்பவருக்கு சரக்கு கடனுக்கு விற்றது ₹ 20,000.

18 மனோ என்பவரால் சரக்கு திருப்பி அனுப்பப்பட்டது ₹ 5,000.

**அல்லது**

(ஆ) கணேஷ் என்பவரின் ஏடுகளிலிருந்து எடுக்கப்பட்ட பின்வரும் இருப்புகளிலிருந்து, வியாபார இலாப நட்டக் கணக்கு தயாரிக்கவும்.

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| சரக்கிருப்பு 1/1/2019 | 8,000 | வாராக்கடன் | 1,200 |
| கொள்முதல் | 22,000 | வியாபாரச் செலவுகள் | 1,200 |
| விற்பனை | 42,000 | அளித்த தள்ளுபடி | 600 |
| கொள்முதல் மீதான செலவு | 2,500 | கழிவு கொடுத்தது | 1,100 |
| மின் கட்டணம் | 3,500 | விற்பனைச் செலவுகள் | 600 |
| விற்பனை மீதான செலவுகள் | 1,000 | பழுதுபார்ப்புச் செலவுகள் | 600 |

31/12/2019 அன்றைய இறுதிச் சரக்கிருப்பின் மதிப்பு ₹ 4,500.

(a) Journalise the following transactions.

2019

March

1 Ram started business with cash ₹ 3,00,000

2 Money deposited into bank ₹ 2,00,000

3 Bought furniture from M/s Jaya Furniture for ₹ 28,000 on credit.

4 Purchased goods from Antony for ₹ 5,000, paid through debit card.

5 Purchased goods from Shyam on credit ₹ 50,000.

6 Paid M/s Jaya furniture.

10 Paid electricity bill of the Proprietor ₹ 2,000.

11 Withdrew from bank for personal use ₹ 800.

12 Goods sold to Mano ₹ 20,000 on credit.

18 Goods returned by Mano ₹ 5,000.

**OR**

(b) From the following balances prepare trading and profit & loss account of Mr. Ganesh.

| Particulars | ₹ | Particulars | ₹ |
|---|---|---|---|
| Stock on 1/1/2019 | 8,000 | Bad debts | 1,200 |
| Purchases | 22,000 | Trade expenses | 1,200 |
| Sales | 42,000 | Discount allowed | 600 |
| Expenses on purchases | 2,500 | Commission allowed | 1,100 |
| Electricity charges | 3,500 | Selling expenses | 600 |
| Expenses on sales | 1,000 | Repairs | 600 |

Closing stock on 31/12/2019 was ₹ 4,500.

42. (அ) கீழ்க்கண்ட நடவடிக்கைகளுக்கு குறிப்பேட்டுப் பதிவுகள் தந்து அவற்றைக் கொண்டு ரொக்கக் கணக்கு மற்றும் விற்பனைக் கணக்கு ஆகியவற்றை தயாரிக்கவும்.

2017

ஆகஸ்டு 10 சரக்குகள் விற்பனை செய்யப்பட்டு காசோலையும் பெறப்பட்டது. ஆனால், அதனை வங்கியில் செலுத்தவில்லை ₹ 30,000.

14 கோபி என்பவருக்கு கடனாக விற்ற சரக்கு ₹ 12,000

20 கோபியிடமிருந்து ரொக்கம் பெற்றது ₹ 12,000

**அல்லது**

(ஆ) முதலினச்செலவு மற்றும் வருவாயினச் செலவு – வேறுபடுத்தவும்.

(a) Give Journal entries for the following transactions and post them to Cash A/c and Sales A/c.

2017

Aug 10 Sold goods and cheque received but not deposited ₹ 30,000.

14 Sold goods on credit to Gopi ₹ 12,000.

20 Received cash from Gopi ₹ 12,000.

**OR**

(b) Differentiate between Capital expenditure and Revenue expenditure.

43. (அ) பாபு என்பவரது ஏடுகளிலிருந்து எடுக்கப்பட்ட கீழ்க்காணும் இருப்புகளைக் கொண்டு 31.03.2016 -ஆம் நாளுக்குரிய இருப்பாய்வு தயாரிக்கவும்.

| | ₹ |
|---|---|
| கை ரொக்கம் | 7,000 |
| பற்பல கடனாளிகள் | 5,400 |
| சம்பளம் | 6,800 |
| வாராக்கடன் | 200 |
| தொடக்கச் சரக்கிருப்பு | 15,400 |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 7,000 |
| பற்பல கடனீந்தோர் | 11,800 |
| முதல் | 25,000 |
| கொள்முதல் | 45,000 |
| விற்பனை | 50,000 |

**அல்லது**

(ஆ) நிக்கோலஸ் என்பவரின் ஏடுகளிலிருந்து எடுக்கப்பட்ட 2016 மார்ச் 31 -ஆம் நாளைய இருப்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| கொள்முதல் | 10,000 | விற்பனை | 15,100 |
| கூலி | 600 | பெற்ற கழிவு | 1,900 |
| உள் ஏற்றிச் செல் செலவு | 750 | வாடகை பெற்றது | 600 |
| விளம்பரம் | 500 | | |
| வெளித் தூக்குகூலி | 400 | | |
| சரக்கிருப்பு (01/01/2016) | 1,000 | | |

2016 மார்ச் 31 -ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்குரிய வியாபார இலாப நட்டக் கணக்கை தயார் செய்யவும்.

**சரிக்கட்டுதல்கள் :**

(அ) முன்கூட்டிப் பெற்ற கழிவு ₹ 400.

(ஆ) கொடுபட வேண்டிய கூலி ₹ 200.

(இ) முன்கூட்டி செலுத்திய விளம்பரம் ₹ 150.

(ஈ) 31.03.2016 அன்று இறுதிச்சரக்கிருப்பின் மதிப்பு ₹ 2,100.

(a) Prepare the trial balance from the following balances of Babu as on 31st March, 2016.

| | ₹ |
|---|---|
| Cash in hand | 7,000 |
| Sundry debtors | 5,400 |
| Salaries | 6,800 |
| Bad debts | 200 |
| Opening stock | 15,400 |
| Bills receivable | 7,000 |
| Creditors | 11,800 |
| Capital | 25,000 |
| Purchases | 45,000 |
| Sales | 50,000 |

**OR**

(b) Given below are the balances extracted from the books of Nicholas as on 31st March 2016.

| **Particulars** | **₹** | **Particulars** | **₹** |
|---|---|---|---|
| Purchases | 10,000 | Sales | 15,100 |
| Wages | 600 | Commission received | 1,900 |
| Freight Inwards | 750 | Rent received | 600 |
| Advertisement | 500 | | |
| Carriage outwards | 400 | | |
| Stock on (01/01/2016) | 1,000 | | |

Prepare trading and profit & loss account for the year ended 31 March, 2016 after adjusting the following.

(a) Commission received in advance ₹ 400.

(b) Wages outstanding ₹ 200.

(c) Advertisement paid in advance ₹ 150.

(d) Closing stock on 31st March 2016 ₹ 2,100.

**44.** (அ) பின்வரும் விபரங்களைக் கொண்டு 2017 ஜூன் மாதத்திற்கான கொள்முதல் ஏடு மற்றும் கொள்முதல் திருப்ப ஏட்டினை தயார் செய்க.

2017

ஜூன் 1 பாலன் நிறுவனத்திடமிருந்து ஒன்று ₹ 150 வீதம் 20 நாற்காலிகள் கடனுக்கு வாங்கியது.

ஜூன் 13 சுபா & கோ-விடமிருந்து கடனுக்கு வாங்கியது.

ஒன்று ₹ 3,100 வீதம் 2 அலமாரிகள்

ஒன்று ₹ 1,500 வீதம் 10 மேசைகள்

கழிக்க : 10% வியாபாரத் தள்ளுபடி

கூட்டுக : ₹ 220 சரக்கு தூக்குக் கூலி

ஜூன் 21 பழுதடைந்து இருந்ததால் பாலன் நிறுவனத்திற்கு 2 நாற்காலிகள் திருப்பி அனுப்பப்பட்டன. ரொக்கம் பெறப்படவில்லை.

ஜூன் 24 சங்கர் அறைகலன் நிறுவனத்திடம் இருந்து கடனுக்கு வாங்கியது ஒன்று ₹ 1,300 வீதம் 25 அலமாரிகள்.

ஜூன் 27 முருகன் நிறுவனத்திடமிருந்து கடனுக்கு வாங்கியது. ஒன்று ₹ 3,275 வீதம் 10 நிர்வாக மேசைகள்.

ஜூன் 29 பழுதடைந்த 3 அலமாரிகள் சங்கர் அறைகலன் நிறுவனத்திற்கு திருப்பி அனுப்பப்பட்டன, ரொக்கம் பெறப்படவில்லை.

அல்லது

(ஆ) திரு. கணபதி என்பவரின் முப்பத்தி ரொக்க ஏட்டை பின்வரும் விவரங்களிலிருந்து தயாரிக்கவும்.

| 2017 | | | ₹ |
|---|---|---|---|
| பிப்ரவரி | 1 | கையிருப்பு ரொக்கம் | 12,500 |
| | | வங்கி ரொக்கம் | 5,000 |
| | 5 | தண்ணீர் சுத்திகரிக்கும் இயந்திரத்தை அலுவலகப் பயன்பாட்டிற்காக காசோலை மூலம் வாங்கியது | 4,000 |
| | 6 | ரொக்கம் செலுத்தி சரக்கு வாங்கியது | 4,500 |
| | 8 | டேனியலிடமிருந்து பெற்ற ரொக்கம் | 4,450 |
| | | அவருக்கு அளித்த தள்ளுபடி | 50 |
| | 10 | சரக்குகளை விற்று பெற்ற காசோலையை வங்கியில் செலுத்தியது | 20,000 |
| | 12 | அமலாவிற்கு காசோலை கொடுத்தது | 7,250 |
| | | அவரிடமிருந்து பெற்ற தள்ளுபடி | 250 |
| | 13 | போக்குவரத்துச் செலவுகளை ரொக்கமாகச் செலுத்தியது | 2,500 |
| | 14 | அலுவலக தேவைக்காக வங்கியிலிருந்து பணம் எடுத்தது | 10,000 |
| | 19 | குமாரிடமிருந்து பெற்ற காசோலை வங்கியில் செலுத்தப்பட்டது | 7,500 |
| | 24 | குமாரின் காசோலை வங்கியால் மறுக்கப்பட்டு திருப்பப்பட்டது | 7,500 |

(a) From the following information, prepare purchase day book and purchases returns book for the month of June 2017.

| 2017 | |
|---|---|
| June 1 | Purchased from Balan Traders 20 chairs @ ₹ 150 each on credit. |
| June 13 | Bought from Subha & Co., on credit<br>2 Almirah @ ₹ 3,100 each<br>10 tables @ ₹ 1,500 each<br>Less 10% trade discount<br>Add Freight charges @ ₹ 220 |
| June 21 | Returned 2 damaged chairs to Balan traders and cash not received. |
| June 24 | Purchased from Shankar Furniture Mart on Credit 25 Almirahs @ ₹ 1,300 each. |
| June 27 | Purchased from Murugan Traders on credit 10 executive tables @ ₹ 3,275 each. |
| June 29 | Returned 3 Almirahs to Shankar Furniture Mart and cash not received. |

**OR**

(b) Prepare a triple column cash book of Mr. Ganapathy from the following transactions.

| 2017 | | | ₹ |
|---|---|---|---|
| Feb | 1 | Cash in hand | 12,500 |
| | | Cash at bank | 5,000 |
| | 5 | Water purifier purchased for office use by cheque | 4,000 |
| | 6 | Purchased goods for cash | 4,500 |
| | 8 | Received cash from Daniel | 4,450 |
| | | Discount allowed to him | 50 |
| | 10 | Cheque received for goods sold and deposited in the bank | 20,000 |
| | 12 | Paid to Amala by cheque | 7,250 |
| | | Discount received | 250 |
| | 13 | Paid transport charges by cash | 2,500 |
| | 14 | Withdrawn cash from bank for office use | 10,000 |
| | 19 | Cheque received from Kumar and deposited into the bank | 7,500 |
| | 24 | Kumar's cheque dishonoured | 7,500 |

**45.** (அ) 2017 மே மாதத்திற்கான திரு. சுந்தரேசன் அவர்களின் பின்வரும் நடவடிக்கைகளை தனிப்பத்தி ரொக்க ஏட்டில் பதிவு செய்க.

| மே | | ₹ |
|---|---|---|
| 1 | கையிருப்பு ரொக்கம் | 40,000 |
| 5 | ஸ்வாதியிடமிருந்து பெற்ற ரொக்கம் | 4,000 |
| 7 | கூலி ரொக்கமாகக் கொடுத்தது | 2,000 |
| 10 | சசிகலாவிடமிருந்து ரொக்கத்திற்கு கொள்முதல் செய்தது | 6,000 |
| 15 | ரொக்கத்திற்கு விற்பனை செய்தது | 9,000 |
| 18 | கணிப்பொறி வாங்கியது | 15,000 |
| 22 | சபாபதிக்கு ரொக்கம் செலுத்தியது | 5,000 |
| 28 | சம்பளம் கொடுத்தது | 2,500 |
| 30 | வட்டிப் பெற்றது | 500 |

அல்லது

(ஆ) பின்வருவனவற்றை ஆள்சார் கணக்கு, சொத்துக் கணக்கு மற்றும் பெயரளவு கணக்கு என்று வகைப்படுத்துக.

(i) வங்கி

(ii) வெளி ஏற்றிச்செல் செலவு

(iii) கொள்முதல்

(iv) ஹரிஷ்

(v) முன்கூட்டி செலுத்தியது செலவு

(vi) அறைகலன்

(vii) நற்பெயர்

(viii) விற்பனை

(ix) வட்டி பெற்றது

(x) முதல்

(a) Enter the following transactions in a single column cash book of Mr. Sundaresan for May, 2017.

| May | | ₹ |
|---|---|---|
| 1 | Cash in hand | 40,000 |
| 5 | Cash received from Swathi | 4,000 |
| 7 | Paid wages in cash | 2,000 |
| 10 | Purchased goods from Sasikala for cash | 6,000 |
| 15 | Sold goods for cash | 9,000 |
| 18 | Purchased computer | 15,000 |
| 22 | Cash paid to Sabapathi | 5,000 |
| 28 | Paid Salary | 2,500 |
| 30 | Interest received | 500 |

**OR**

(b) Classify the following into personal, real and nominal accounts.

(i) Bank (ii) Carriage outward

(iii) Purchases (iv) Harish

(v) Prepaid expenses (vi) Furniture

(vii) Goodwill (viii) Sales

(ix) Interest received (x) Capital

46. (அ) (i) தேய்மானம் – வரையறுக்கவும்.

(ii) தேய்மானம் ஏற்படுவதற்கான காரணங்கள் மூன்றினை விவரிக்கவும்.

**அல்லது**

(ஆ) கீழ்க்காணும் தகவல்களிலிருந்து திருமதி. வினோதினி என்பவரின் ஏடுகளில் 2017 டிசம்பர் 31 -ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்குரிய வியாபார இலாப நட்டக் கணக்கையும் அந்நாளைய இருப்பு நிலைக் குறிப்பையும் தயாரிக்கவும்.

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| தொடக்கச் சரக்கிருப்பு | 2,500 | விற்பனை | 7,000 |
| உள் தூக்குகூலி | 2,700 | கொள்முதல் | 3,300 |
| இறுதிச் சரக்கிருப்பு | 4,000 | வாடகை | 2,600 |
| வட்டி பெற்றது | 2,500 | முதல் | 52,000 |
| பொறிகள் | 52,000 | ரொக்கம் | 6,400 |
| கடனீந்தோர் | 8,000 | | |

(a) (i) Define depreciation.

(ii) Explain any three causes of depreciation.

**OR**

(b) Prepare trading and profit and loss account in the books of Ms. Vinodhini for the year ended 31/12/2017 and balance sheet as on that date from the following information.

| Particulars | ₹ | Particulars | ₹ |
|---|---|---|---|
| Opening stock | 2,500 | Sales | 7,000 |
| Carriage inwards | 2,700 | Purchases | 3,300 |
| Closing stock | 4,000 | Rent | 2,600 |
| Interest received | 2,500 | Capital | 52,000 |
| Plant | 52,000 | Cash | 6,400 |
| Creditors | 8,000 | | |

**47.** (அ) நவீன வணிக உலகில் கணக்காளரின் பங்களிப்பு பற்றி விளக்குக. (ஏதேனும் ஐந்து)

**அல்லது**

(ஆ) கீழ்க்காணும் செலவினங்களையும், வரவினங்களையும் முதலினமா அல்லது வருவாயினமா என வகைப்படுத்துக.

(i) நிலைச்சொத்து வாங்குவதற்காக, இயக்குனரின் வெளிநாட்டுப் பயணத்திற்கு செலவழிக்கப்பட்ட தொகை ₹ 10,000.

(ii) பெறுதற்குரிய கடனாளிகளிடமிருந்து அந்த வருடத்தில் பெற்ற தொகை.

(iii) புதிய கட்டடம் கட்டுவதற்காக பழைய கட்டடத்தை இடிப்பதற்கு மேற்கொண்ட செலவு.

(iv) தீயினால் இயந்திரத்தில் ஏற்பட்ட பாதிப்பிற்காக பெறப்பட்ட காப்பீட்டு உரிமைத் தொகை.

(v) வாகனத்தின் எரிபொருள் திறனை அதிகரிக்க அதன் இயந்திரத்தைப் புதுப்பிக்க மேற்கொண்ட செலவு ₹ 25,000.

(a) Explain the role of an accountant in the modern business world. [any 5 points]

**OR**

(b) Classify the following expenditures and receipts as capital or revenue :

(i) ₹ 10,000 spent as travelling expenses of the director on trip abroad for the purchase of fixed assets.

(ii) Amount received from trade receivables during the year.

(iii) Amount spent on demolition of building to construct a new building on the same site.

(iv) Insurance claim received on account of a machinery damaged by fire.

(v) Overhauling expenses of ₹ 25,000 for the engine of a motor car to get better fuel efficiency.

- o 0 o -